**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : SC.No.344/2021**
**வழக்கு சாட்சி PW–1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | அருணாகரன் | ஜாதி | : | |
| தந்தை பெயர் | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுகா | : | | வயது | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of March 25th , 2025.

**(எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :**

நான் தற்போது சேந்தமரம் காவல்நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு பாவூர்சத்திரம் காவல்நிலையத்தில் முதல்நிலை காவலராக பணிபுரிந்தபோது, 29.09.2019 ம் தேதி, மாலை 18.00 மணிக்கு என்னுடன் காவலர் முத்துராஜப்பா என்பவரும் கீழப்பாவூரில் உள்ள முப்பிடாதியம்மன் கோவில் திருவிழாவை முன்னிட்டு நடைபெற்ற பாட்டு கச்சேரி பாதுகாப்பு அலுவலாக சென்றோம். 21.45 மணியளவில் பின்னால் பெயர், விலாசம் கேட்டு தெரிந்து கொண்ட கீழப்பாவூர், முத்தாரம்மன் கோவில் தெருவை சேர்ந்த முருகன் என்பவரின் மகன் அருணாச்சலம் என்ற வினோத் ஆடிக்கொண்டும், விசல் அடித்து கொண்டும் பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படும் வகையில் நடந்து கொண்டார். அருகில் சென்ற நானும், முத்துராஜாப்பாவும் "ஏன் இப்படி செய்கிறாய், பொதுமக்களுக்கு இடையூறாக உள்ளது, வசில் அடித்து ஆட

வேண்டாம்" என்று எச்சரித்தோம். அப்போது, அருகே நின்று கொண்டிருந்த கீழப்பாவூர், மூவேந்தர் தெற்கு தெருவைச் சேர்ந்த சுடலைஈசன் என்பவரின் மகன் தங்கபாண்டியன் என்பவர் "எதற்காக எனது நண்பனை ஆட வேண்டாம் என்று சொல்கிறீர்கள், இந்த போலீஸ்கார புண்ட மக்களுக்கு இதே வேலையா போய்விட்டது" என்று கெட்ட வார்த்தைகளால் பேசி, பொது இடத்தில் அரசு பணியை செய்ய விடாமல் தடுத்து, குறுக்கீடு செய்தார். அருகில் இருந்தவர்கள் சத்தம் போடவும், இருவரும் சென்று விட்டார்கள். மீண்டும் இரவு 22.00 மணிக்கு பாட்டு கச்சேரி நடைபெற்ற இடத்திற்கு வந்த எதிரிகள் இருவரும் கையில் ஆளுக்கொரு கம்பி வைத்திருந்தார்கள். என்னைப் பார்த்து, அருணாச்சலம் என்ற வினோத் "இப்போ பேசுங்க, போலீஸ்கார புண்ட மக்களா" என்று கூறி, கையில் வைத்திருந்த இரும்பு கம்பியால், எனது தலையை குறி பார்த்து ஓங்கி அடிக்க வந்தார். நான் சற்று விலகியதால் அந்த அடி தரையில் பட்டது. என் தலையின் மீது பட்டிருந்தால் செத்தே போயிருப்பேன். உடனே அருகில் இருந்த முத்துராஜப்பா "ஏம்ப்பா இப்படி செய்கறீர்கள்" என்று கூறினார். அப்போது தங்கப்பாண்டியன் கையில் வைத்திருந்த இரும்பு கம்பியால் முத்துராஜப்பாவின் தலையை குறி வைத்து ஓங்கி அடிக்க வந்தார். முத்துராஜப்பா சற்று விலகியதால் அந்த அடி தரையில் பட்டது. அவரது தலையில் பட்டிருந்தால் அவரும் அங்கேயே செத்தே போயிருப்பார். உடனே, அருகில் பாட்டு கச்சேரியை பார்த்து கொண்டிருந்த கீழப்பாவூரைச் சேர்ந்த மாடக்கண்ணு மற்றும் பொன்ராஜ் இருவருடன் மற்ற சிலரும் சேர்ந்து, ஆஜர் எதிரிகளை பார்த்து, "ஏன்ப்பா, போலீஸ்காரங்க அவங்க வேலைகளை தான் செய்ய வந்திருக்காங்க, அவங்ககிட்ட எதுக்கு தேவையில்லாம பிரச்சனை பண்ணிக்கிட்டு இருக்கீங்க," என்று கூறி சத்தம் போடவும், எதிரிகள் இரும்பு கம்பியை கையில் வைத்துக்கொண்டு,

"எங்க ஊர்ல எங்கள ஆடக்கூடாதுனு சொல்லுறதுக்கு எவனுக்கும் அதிகாரம் இல்ல, அப்படி போலீஸ்காரங்க வந்தால், அவங்களையும் அடிச்சு கொன்னுருவோம்" என்று கொலை மிரட்டல் விடுத்து, இரும்பு கம்பிகளுடன் கிழக்கு பக்கமாக சென்று விட்டார்கள். நானும், முத்துராஜப்பாவும் இரவு பணியை முடித்து, 30.09.2019 ம் தேதி காலை 06.30 மணியளவில் நிலையம் ஆஜராகி, 07.00 மணிக்கு நடைபெற்ற ஆஜர் அணிவகுப்பில் கலந்து கொண்டு, 29.09.2019 ம் தேதி இரவு பாட்டுகச்சேரியில் எங்களை 10 நிமிடம் அரசு பணியை செய்ய விடாமல் தடுத்தும், இரும்பு கம்பியால் அடிக்க வந்ததையும், கொலை மிரட்டல் விடுத்ததையும் தனி அறிக்கையாக காவல்நிலையத்தில் ஆய்வாளரிடம் கொடுத்தேன். அந்த தனி அறிக்கை இது தான். அது **அ.சா.ஆ.1.** இது தொடர்பாக காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u> –

இல்லை.

PW1

C KATHIRAVAN

Digitally signed by C KATHIRAVAN
Date: 2025.03.26 16:44:38 +0530